புதுவை பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கம் அளவறை
எண்.பி.508

ஆர்.வி. நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

---

புபஅகூச/1க.ஊ.ப/03/2013-14 நாள்: 12.08.2013

<u>சுற்றறிக்கை</u>

அன்பார்ந்த உறுப்பினர்களுக்கு

வணக்கம்,

ஒவ்வொரு ஆண்டும் 10வது மற்றும் 12வது வகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற நமது சங்க உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு பரிசளிப்பு விழா வரும் 19.08.2013 திங்கட்கிழமை அன்று மாலை 3.00 மணியளவில் நமது பல்கலைக்கழக டாக்டர் அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் அமைந்துள்ள E.C Hall லில் நடைபெற உள்ளது. இந்த விழாவில் நமது பல்கலைக்கழக துணை வேந்தர் அவர்கள் கலந்துகொண்டு மாணவ மாணவியர்களுக்கு பரிசளித்து தலைமையுரையாற்றவும், மற்றும் நமது பல்கலைக்கழக பதிவாளார், இயக்குநர், நிதிஅதிகாரி அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கவும் இசைந்துள்ளர்கள். ஆகவே நமது சங்க உறுப்பினர்கள் இவ்விழாவில் தங்கள் மகன் மகள் அனைவரையும் இந்த விழாவிற்கு அழைத்து வந்து அவர்கள் மேன் மேலும் பல பரிசுகளை பெற ஊக்கம் அளிக்குமாறு நமது சங்க இயக்குநர்கள் குழு சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இவண்

M. Ramanathan

(U. ராமநாதன்)
தலைவர்

புதுவை பல்கலைக்கழக அலுவலர் கூட்டுறவு கடன் சங்கம் அளவறை
எண்.பி.508

ஆர்.வி. நகர் காலாப்பட்டு புதுச்சேரி-14

புபஅகூச/1க.ஊ.ப/02/2013-14 நாள்: 08.08.2013

## சுற்றறிக்கை

பொருள்: உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு கல்வி ஊக்கப் பரிசு வழங்குதல் - சமபந்தமாக.

நமது சங்க இயக்குநர்கள் குழு ஒப்புதலுடன் நமது சங்க உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு (மகன், மகள் மட்டும்) கடந்த 2011-12 கல்வி ஆண்டில் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்றுள்ள மாணவ மாணவியர்களுக்கு பரிசுத்தொகையும், சான்றிதழ்களும் மற்றும் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் கடந்த ஆண்டு வழங்கப்பட்டதைப்போல் 2012-13 கல்வி ஆண்டுக்கும் கல்வி ஊக்கப்பரிசு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ள முதல் மூன்று மாணவ, மாணவியர்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழும் மற்ற அனைத்து மாணவ மாணவியர்களுக்கு ரூ.800 (ரூபாய் எண்ணூறு மட்டும்) ரொக்கப்பரிசு வழங்கப்படும்.

### ரொக்கப்பரிசு விபரம்

| வகுப்பு | முதல் பரிசு | இரண்டாம் பரிசு | மூன்றாம் பரிசு |
|---|---|---|---|
| பத்தாம் வகுப்பு | ரூ.2500 | ரூ.2000 | ரூ.1500 |
| பன்னிரெண்டாம் வகுப்பு | ரூ.2500 | ரூ.2000 | ரூ.1500 |

**பத்தாம் வகுப்பு தேர்வில் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியர் விபரம்**

| பரிசு விபரங்கள் | மாணவ,மாணவியர் பெயர் | தந்தை,தாயார் பெயர் | தந்தை,தாயார் பணிபுரியும் இடம் |
|---|---|---|---|
| 1st Prize | HAMSIKA. V | UMA. V | COMPUTER SCIENCE |
| 2nd Prize | NEHARIKA. S | SUNDARAMOHAN.S | BIO-INFORMATICS |
| 3rd Prize | KEERTHANA. G | GIRIDHARAN. N | ESTABLISHMENT |

**பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வில் மூன்று இடங்களை பிடித்த மாணவ மாணவியர் விபரம்**

| பரிசு விபரங்கள் | மாணவ,மாணவியர் பெயர் | தந்தை,தாயார் பெயர் | தந்தை,தாயார் பணிபுரியும் இடம் |
|---|---|---|---|
| 1st Prize | SENTHILKUMAR. D | DR.T. DURAIVEL | MATHEMATICS |
| 2nd Prize | SRIMAN RAM. M.R. | RAJENDIRAN. M | PLANNING SEC |
| 3rd Prize | VISHNUPRIYA. S.R. | RAJASEKARAN. S | ESTABLISHMENT |
| | | | |

இந்த கல்வி ஊக்கப்பரிசு அனைத்தும் வரும் 19.08.2013 திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் நமது பல்கலைக்கழக டாக்டர் அம்பேத்கர் நிர்வாக கட்டிடத்தில் அமைந்துள்ள E.C Hall-லில் நடைபெற உள்ள நமது சங்கத்தின் ஊக்கப் பரிசளிப்பு நிகழ்ச்சியில் நமது பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களின் கரங்களால் வழங்கப்படும் என்பதனை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இனிவரும் கல்வியாண்டுகளல் நமது சங்க உறுப்பினர்களின் மகன் மகள்கள் அதிக அளவில் பரிசுகளை பெறவேண்டும் என்பதே நமது சங்கத்தின் உயரிய நோக்கம், எனவே தங்கள் மகன் மகள் அனைவரையும் இந்த விழாவிற்கு அழைத்து வந்து அவர்கள் மேன் மேலும் பல பரிசுகளை பெற ஊக்கம் அளிக்குமாறு நமது சங்க இயக்குநர்கள் குழு சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இவண்

(U. ராமநாதன்)
தலைவர்